**<u>மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அருந்ததியர் வகுப்பினருக்குத் தனி உள் ஒதுக்கீடு வழங்குவது குறித்த ஆலோசனை கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

**(12.03.2008)**

**மாண்புமிகு பேராசிரியர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே,**

**அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களே,**

**தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே,**

**மற்றும் நண்பர்களே,**

**ஆதிதிராவிடருக்கு வழங்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டில், அருந்ததியர் வகுப்பினருக்குத் தனி உள் ஒதுக்கீடு வழங்குவது பற்றி முடிவு மேற்கொள்ள இன்று நடைபெறுகின்ற ஆலோசனை கூட்டத்தில் இந்த அரசின் அழைப்பினை ஏற்று வருகை புரிந்துள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் தமிழக அரசின் சார்பில் என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**சமுதாயத்தில் கல்வியிலும் பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கிய நிலையிலே வாழும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்குக் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் தனி இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற அடிப்படையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஆதி திராவிட மக்களுக்கும், பழங்குடியின மக்களுக்கும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.**

**இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள சலுகைகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களை அடுத்து 1969 ஆம் ஆண்டில் முதலமைச்சராக நான் பொறுப்பேற்றுக் கொண்ட ஒரு சில மாதங்களில் அதாவது 13.11.1969 அன்று பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், நலிந்த பிரிவினர் நலன்களை மேம்படுத்துவதற்காக திரு. ஏ.என். சட்டநாதன் அவர்களின்**

தலைமையில் இந்தியாவிலேயே முதன் முதலாக பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் 1971 ஆம் ஆண்டில், 7.6.1971 அன்று ஆதிதிராவிடர் களுக்கும், பழங்குடியினருக்கும் சேர்த்துப் பல ஆண்டு காலமாக இருந்த இட ஒதுக்கீடு 16 சதவிகிதம் என்பது 18 சதவிகிதம் என உயர்த்தப்பட்டது.

பின்னர், 1990 ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பினை ஒட்டியும், தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான 18 விழுக்காடு முழுவதையும் ஆதிதிராவிடர் மக்களுக்கென (Scheduled Castes) ஒதுக்கீடு செய்ததுடன், பழங்குடியின மக்களுக்கென (Scheduled Tribes) தனியே 1 விழுக்காடும் ஒதுக்கீடு செய்து 22.6.1990 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்) ஆணை 1950–ன்கீழ் திருத்தச் சட்டம் 1976 (சட்டம் 108/1976)–ன்படி, தமிழ்நாட்டில் மொத்தம் 36 சாதியினர் பழங்குடியினர் எனவும், 76 சாதியினர் ஆதிதிராவிடர் இன மக்கள் எனவும் அறிவிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான இட ஒதுக்கீடுகள் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் முறையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதில் தமிழக அரசு மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 6 கோடியே 24 இலட்சத்து 6 ஆயிரம்;

இதில், ஆதிதிராவிடர்கள் எண்ணிக்கை ஒரு கோடியே 18 இலட்சத்து 58 ஆயிரம்;

தமிழ்நாட்டில் வாழும் ஆதி திராவிடர் இன மக்களில் 76 பிரிவினர் உள்ளனர். அவற்றில் அருந்ததியர் ஒரு பிரிவினர் ஆவர்.

ஆதிதிராவிடர் இன மக்களில் அருந்ததியினர் தமக்கு உள் இட ஒதுக்கீடு கோரி வருகின்றனர்.

76 பிரிவினர்களாக உள்ள ஆதி திராவிட இன மக்களில் ஆதி திராவிடர், பள்ளர், பறையர், சக்கிலியர், மற்றும் அருந்ததியர் ஆகிய ஐந்து பிரிவினர் பெரும்பான்மையினராக உள்ளனர்.

இந்த ஐந்து பிரிவினர் மொத்த ஆதி திராவிட இன மக்கள் தொகையில் 93.5 விழுக்காடு.

2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் அருந்ததியர் மக்கள் தொகை 7 லட்சத்து 71 ஆயிரத்து 659.

சக்கிலிய மக்கள் தொகை 7 லட்சத்து 77 ஆயிரத்து 139.

அருந்ததியர் மற்றும் சக்கிலியர் ஆகிய இரண்டு பிரிவுகளையும் சேர்த்தால் அவர்களின் மக்கள் தெகை 15 லட்சத்து 48 ஆயிரத்து 798.

இந்த இரு பிரிவினரும் ஆதி திராவிடரின் மொத்த மக்கள் தொகையில் 13.06 சதவிகிதம் ஆகும்.

மொத்த ஆதி திராவிட மக்கள் தொகையான ஒரு கோடியே 18 லட்சத்து 58 ஆயிரம் பேருக்கு 18 சதவிகிதம் இட ஒதுக்கீடு எனும்போது, அவர்களில் 13.06 சதவிகிதமான 15 லட்சத்து 48 ஆயிரம் பேரைக் கொண்ட அருந்ததியர் மற்றும் சக்கிலியருக்கு 2.35 சத விகிதம் இட ஒதுக்கீடு வழங்க வேண்டி வரலாம்.

தமது கோரிக்கையில், உள் ஒதுக்கீட்டில், இந்து அருந்ததியர்கள், இந்து சக்கிலியர்கள், இந்து மாதாரி, இந்து பகடை என 4 உட்பிரிவுகள் உள்ளன எனவும், இவர்கள் அனைவரும் ஒரே மாதிரியாக திருமணம் மற்றும் இதர, சமூகச் சடங்குகளை வேறுபாடின்றி நடத்தி வருகின்றனர் எனவும்,

எனவே அருந்ததியர்களுக்கு தனி உள் ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப் படும்பொழுது இந்து அருந்ததியர், இந்து சக்கிலியர், இந்து பகடை,

இந்து மாதாரி என்ற 4 சாதிகளுக்கும் ஒரே அரசாணையாக அறிவிக்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

23.1.2008 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் நடைபெற்ற மேதகு ஆளுநர் அவர்களின் உரையில்,

> "அருந்ததியர் வகுப்பினர் சமூகப் பொருளாதார நிலையில் அடித்தளத்தில் இருப்பதால், அவர்தம் முன்னேற்றத்திற்குச் சிறப்புச் சலுகைகள் அளிப்பது அவசியம் எனக் கருதி, தற்போது ஆதிதிராவிடருக்கு வழங்கப்பட்டுவரும் இட ஒதுக்கீட்டில் இவர்களுக்குத் தனி உள் ஒதுக்கீடு வழங்குவது பற்றி அனைத்துக் கட்சிகளையும் கலந்தாலோசித்து முடிவு செய்ய இந்த அரசு கருதியுள்ளது."

—என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆதிதிராவிடர்களில் அருந்ததி இன மக்களின் கோரிக்கை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்குமாறும் அக்கருத்துகளின் அடிப்படையில் அரசு கொள்கை முடிவு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

***